பணியாளர்களாகக் கருதப்படவில்லை. அரசுப் **பணியாளர்களாகக் கருதப்** பட்டால்தான் ஊதிய உயர்வு போன்ற அதற்குரிய வகைகள் செய்யப்படும். அதனால் அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறது.

THIRU N. DENNIS : Sir, may I know whether any representation was received by the Government from the aggrieved 'Mukhyasevikas' duly recommended by the Collectors for the regularisation of their services as per the protection given in the Government Order from the date of their appointment in the Social Welfare Board ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அவர்கள் கோரிக்கை ஒன்று கொடுத்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கிடைக்கும் பாறைப்படிவங்கள்.**

* 173. வினா—திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்டம், தியாகதுருகத்தில் கிடைக்கும் பாறைகள் சலவைக் கற்கள் தயாரிக்கப் பயன்படுவதாக சொல்லப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) தென் ஆற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள வீர சோழபுரம், நத்தம், பனையங்கல், தியாகதுருகத்திற்கு அருகிலுள்ள கொங்கராய பாளையம் ஆகிய கிராமங்களில் டாலிரைட் என்னும் கருவண்ணமுறைப் பாறைகள் சிற்சிறு படிவங்களாகக் கிடைக்கின்றன.

**சைக்கிள் தொழிற்சாலைகள்**

* 174. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் புதிய சைக்கிள் தொழிற்சாலைகளைத் துவக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** சில ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சாவூரில் ஒரு சைக்கிள் தொழிற்சாலை கூட்டுறவுமுறையில் துவக்கப்பட்டது. அந்தத் தொழிற் சாலை இன்று இயங்குகிறதா ? ஆமெனில் அது லாபத்தில் நடைபெறுகிறதா,